# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## திருவாரூர் மாவட்டம்

## நிர்வாக அறிக்கை

## 2018-2019

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## நிர்வாக அறிக்கை

# 2018 - 2019

# அமைப்பும் நிர்வாகமும்

§§§

தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **30–03–1992**ஆம் நாள் **76–**ம் எண் அரசாணையின்படி திருத்துறைப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி **01–04–1992** முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டு **22–05–1998–**ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **85–**ம் எண் அரசாணையின்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு **11.935** சதுர கிலோ மீட்டராகும். **2011–**ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **24404** ஆகும். இந்நகராட்சி திருவாரூர் மாவட்டம் **166.**திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியிலும் **29.** நாகப்பட்டினம் நாடாளுமன்ற தொகுதியிலும் அமைந்துள்ளது.

| | |
|---|---|
| அமைவிடம் மற்றும் புவி அமைப்பு | திருவாரூரிலிருந்து தெற்கே 28.கி.மீ<br>மன்னார்குடியிலிருந்து கிழக்கே 28.கி.மீ<br><br>அட்சரேகை-10.53°N<br>தீர்க்கரேகை -79.65°E |
| கல்வி கற்றவர்கள் | ஆண்கள்-93.00%<br>பெண்கள்-84.43%<br>மொத்தம்-88.63% |
| நகரத்தின் முக்கிய தொழில்கள் | விவசாயம் |
| காலநிலை | சராசரி வெப்பநிலை28.3°C., |
| மழையளவு சராசரி | ஆண்டின் மழையளவு சராசரி<br>930.11.மி.மி |
| நகராட்சியின் பெயர் | திருத்துறைப்பூண்டி |
| நகராட்சியின் நிலை/மாவட்டம் | இரண்டாம் நிலை/திருவாரூர் |
| நகராட்சியின் பரப்பளவு | 11.94 ச.கி.மீ. |
| மக்கள் தொகை<br>மக்கள் தொகை நெருக்கம் | 24404<br>2045/ச.கி.மீ |

| | |
|---|---|
| நகராட்சியின் மொத்த வார்டுகள் | 24 |
| தினசரி வந்து செல்வோர் எண்ணிக்கை | 5500 |

**<u>பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோவில் தல வரலாறு</u>**

ஜல்லிகை என்பவள் அரக்க குலத்தில் பிறந்தாலும் சிவபக்தியில் சிறந்தவள் அவளுக்கு மனிதர்களை விழுங்கும் விருபாட்சன் என்ற ராட்சஷன்கணவனாக அமைந்தான். ஒருமுறை, அந்தணச் சிறுவன் தன் தந்தைக்கு சிரார்த்தம் செய்ய கங்கைக்கு சென்று கொண்டிருந்தான், விருபாட்சன் அவனை விழுங்க முயன்றான். ஜல்லிகை தடுத்தாள். அந்ததணர்களை விழுங்கினால் அந்த உணவே விஷமாகும் என எச்சரித்தாள். அவளின் பேச்சைக் கேட்க மறுத்த விருபாட்சன், சிறுவனை விழுங்கியதால், விஷமேறி இறந்தான். ஜல்லிகை திருத்துறைப்பூண்டி சிவனை வணங்கி இறைவா என் கணவன் நல்லவன் அல்ல.

இருப்பினும் அவனின்றி நான் வாழேன். அரக்ககுணத்தை மாற்றி இரக்க குணமுள்ளவர்களையே, இவ்வுலகில் பிறக்கச்செய், இல்லையேல், பிறவியிலிருந்து விடுதலை கொடு என வேண்டினாள். அவளது துயரம் தாங்காத இறைவனின் துணைவியான பெரியநாயகி அவளுக்கு காட்சியளித்தாள். அவளது அருளால் விருபாட்சன் உயிர் பெற்றான். அத்துடன் அவனது வயிற்றில் கிடந்த அந்தணச் சிறுவனையும் எழுப்பினாள். அம்மா நான் என் வழியே போய்க் கொண்டிருந்தேன், இடையில் இவன் என்னை விழுங்கினான். விதி முடிந்த என்னை உயிர்ப்பித்த காரணம் என்ன ? என்றான். அவனிடம் அம்பிகை, மகனே! தந்தை இறந்த பிறகும், எவன் ஒருவன் அவரை நினைத்து ஆண்டுதோறும் அவருக்கு சிரார்த்தம் செய்கிறானோ, அவனுக்கு என்னருள் நிச்சயம் உண்டு, அது மட்டுமின்றி, மறைந்த அந்த தந்தைக்கு மறுபிறவி இல்லாமலும் செய்து சொர்க்கத்தில் இடமளிப்பேன், என்றாள். ஜல்லிகையிடம், மகளே நீ அரக்க குலத்தவள் ஆயினும் நற்குணமும், சிவபக்தியும் கொண்டிருந்தாய். எந்தப் பெண் எவ்வளவு கஷ்டம் வந்தாலும், அதைத் தாங்கிக் கொண்டு, இன்முகத்துடன் கணவனின் நல்வாழ்வை விரும்புகிறாளோ, அவள் சுமங்கலியாக வாழ வழி செய்வேன். அவளது கணவனையும் திருத்துவேன், என்றாள்.

இக்கோயிலின் விசேஷ அம்சம் சிவனின் கஜசம்ஹார மூர்த்தியாகும், அமாவாசை, பவுர்ணமி நாட்களில் இம்மூர்த்தியை வழிபடுவதன் மூலம் மனதில் பயம் என்ற சொல்லுக்கே இடமிருக்காது, இவர் ஆணவத்தையும் வேரறுப்பவர். இதுவே இத்திருக்கோயிலின் தல வரலாறு ஆகும்.

**<u>எல்லை:</u>**

இந்நகராட்சி கீழ்க்காணும் வருவாய் கிராமங்களை உள்ளடக்கி **11.935** சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது.

| | | |
|---|---|---|
| 1. | 37.திருத்துறைப்பூண்டி | 548–10–0 |
| 2. | 36. சிங்களாந்தி | 645–48–0 |

அருகிலுள்ள நான்கெல்லை கிராமங்கள்:

| | | |
|---|---|---|
| 1. | வேளூர் கிராமம் | (வடக்கு) |
| 2. | பாமணி கிராமம் | (கிழக்கு) |
| 3. | மடப்புரம் கிராமம் | (மேற்கு) |
| 4. | நெடும்பலம் கிராமம் | (தெற்கு) |

நடப்பு அறிக்கையாண்டில் புதிதாக எல்லைகள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

**ஆணையர்**

இந்நகராட்சின் ஆணையாளராக திரு.சே.நாகராஜன், அவர்கள் 01.04.2018 முதல் 09.03.2019 முற்பகல் வரை பணியாற்றியுள்ளார். 09.03.2019 முதல் 31.03.2019 வரை திரு.த.பாஸ்கரன் நகராட்சி பொறியாளர் அவர்கள் நகராட்சி ஆணையராக கூடுதல் பொறுப்பு ஏற்று பணிபுரிந்து வருகின்றார்.

**நகராட்சி பொறியாளர்**

இந்நகராட்சியில் 01.04.2018 முதல் 21.12.2018 வரை இரண்டாம் நிலை பொறியாளர் பணியிடத்தில் திரு.என்.சந்திரசேகரன், நகராட்சி பொறியாளர், கூத்தாநல்லூர் அவர்கள், கூடுதல் பொறுப்பில் பொறியாளராக பணிபுரிந்துள்ளார். 22.12.2018 முதல் திரு.பாஸ்கரன், நகராட்சி பொறியாளர் அறிக்கை ஆண்டு வரை பணியாற்றி வருகின்றார்.

**மேலாளர்**

இந்நகராட்சியின் மேலாளராக திரு.ஆ.நாராயணசாமி அவர்கள் 01.04.2018 முதல் 30.06.2018 வரை பணிபுரிந்துள்ளார் 01.07.2018 முதல் திரு.கோ.அசோகன், உதவியாளர்.கூடுதல் பொறுப்பில் மேலாளராக அறிக்கை ஆண்டுவரை பணிபுரிந்து வருகிறார்.

**3.தனி அலுவலர்:**

உள்ளாட்சி தேர்தல் 2016, சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண் 33984/2016ன் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டதாலும் 24.10.2016 அன்றுடன் உள்ளாட்சி நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக்காலம் முடிவிற்கு வந்துள்ளதாலும் அரசாணை எண்.146 (எம்.எஸ்) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் (தேர்தல்) துறை நாள்24.10.2016ன் மூலம் அந்ததந்த நகராட்சி ஆணையர்கள் மற்றும் ஆணையர் பொறுப்பு வகிப்பவர்கள், தனி அலுவலராக நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி ஆணையர் திரு.சே.நாகராஜன்.எம்.ஏ., அவர்கள் 01.04.2018 முதல் 09.03.2019 முற்பகல் வரை தனி அலுவலராக பணிபுரிந்துள்ளார். 09.03.2019 முற்பகல் முதல் திரு.த.பாஸ்கரன், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் கூடுதல் பொறுப்பு அவர்கள் அறிக்கை ஆண்டு வரை தனி அலுவலராக பணி புரிந்துவருகின்றார்.

**4. நகர் மன்றம்**

அறிக்கையாண்டில் மன்றக்கூட்டங்களும், நியமனக்குழு கூட்டங்களும் நகர்மன்றத்தால் விதிகளின்படி நடத்தப்பட்டுள்ளது.

| வ.எ. | கூட்ட விபரம் | மொத்த கூட்டங்கள் எண்ணிக்கை | மொத்த பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சாதாரணக்கூட்டம் | 11 | 137 |
| 2. | அவசரக்கூட்டம் | 7 | 20 |
| 3. | சிறப்புக்கூட்டம் | 0 | 0 |
| | கூடுதல் | 16 | 157 |

மேற்கண்டுள்ளவாறு மன்ற கூட்டங்களில் அறிக்கையாண்டில் 157 எண்ணிக்கை பொருள்கள் முடிவு செய்யப்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள் இல்லை.

அறிக்கையாண்டில் நியமனக்குழு கூட்டம் ஒப்பந்தக்குழு கூட்டம் மற்றும் வரி விதிப்பு மற்றும் மேல் முறையீட்டுக் குழு கூட்டம் நடைபெறவில்லை.

**5. நிர்வாகம்:**

**பொருள்:**

நிர்வாகப் பிரிவில் 31.3.2018 முடிய அறிக்கையாண்டில் பணியாற்றிய அலுவலர்கள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எ. | பணியிட விபரம் | பணியில் உள்ளவர் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|
| 01 | மேலாளர் | 1 | - |
| 02 | கணக்கர் (உதவியாளர் நிலை) | 1 | - |
| 03 | உதவியாளர் | 2 | - |
| 04 | இளநிலை உதவியாளர் | 5 | 1 |
| 05 | கருவூலர் (இளநிலை உதவியாளர்) | 1 | - |
| 06 | தட்டச்சர் | 1 | - |
| 07 | அலுவலக உதவியாளர் | 0 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 08 | இரவுக் காவலர் | 1 | - |
| 09 | பேருந்து நிலைய காவலர் | 1 | - |
| 10 | பதிவறை எழுத்தர் | 1 | - |
| 11 | உதவி கணிணி திட்ட அமைப்பாளர் | 1 | - |

**6. வரி வசூல் பணியாளர்கள்:**

வருவாய் ஆய்வாளர்-1, வருவாய் உதவியாளர்கள்-5 இதில் வருவாய் ஆய்வாளராக திருமதி. கு.தமிழ்மணி 01.04.2018 முதல் 31.01.2019 வரை பணியாற்றியுள்ளார். 01.02.2019 முதல் அறிக்கை ஆண்டுவரை திரு.கு.ஜேம்ஸ்பால்ராஜ், வருவாய் உதவியாளர் என்பவர் வருவாய் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார்.

**7. அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில் பணியாற்றிய அலுவலர்கள்:**

தற்காலிகமாக ஓராண்டிற்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களான இரண்டாம் நிலை பொறியாளர் பணியிடம்-1, ஓவர்சியர்-1 மற்றும் ஓட்டுநர்-1 ஆகிய பணியிடங்கள் 30.9.2011 வரை ஓராண்டிற்கு நீட்டித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.11.2010-ந் தேதிய ந.க.எண்.5436/09/எப்.3 எண் செயல்முறையில் அனுமதிக்கப்பட்டது.

மேலும் 1.10.2011 முதல் நிரந்தரமாக, தற்காலிக பணியிடங்களை நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.694/94/சி1 நாள்.04.01.2018 மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எ. | பணியிட விபரம் | பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|
| 01 | நகராட்சிபொறியாளர் (இரண்டாம் நிலை) | 1 | 0 |
| 02 | ஓவர்சியர் | 0 | 1 |
| 03 | மின் கம்பியாளர் (தெருவிளக்கு பராமரிப்பு) | 1 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 04 | பம்பு மெக்கானிக் (குடிநீர் பராமரிப்பு) | 1 | 1 |
| 05 | ஓட்டுநர் (குடிநீர் பராமரிப்பு) | 1 | - |
| 06 | மின் கம்பி உதவியாளர் | 1 | 1 |
| 07 | நகரமைப்பு ஆய்வர் | 1 | 0 |

**8. வழக்குகள்:**

இந்நகராட்சி தொடர்பான வழக்குகளில் நகராட்சி சார்பாக எதிர் வழக்காட திரு.டி. ஆனந்தன், பி.ஏ.பிஎல்., நகர்மன்றத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றம் தொடர்பான வழக்குகள் அரசு வழக்கறிஞர் மூலம் நடத்தப்பெற்று வருகின்றன. அறிக்கை ஆண்டில் வழக்கிற்காக ரூ.1,00,000/– செலவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செலவினம் ரூ.75000/– ஆகும். வழக்குகளின் நிலை குறித்து கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

| வ.எண் | நீதிமன்றம் | நிலுவை வழக்குகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | அறிக்கை ஆண்டு துவக்கத்தில் | அறிக்கை ஆண்டில் வரப்பெற்றது | அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றது | நிலுவை |
| 1. | சென்னை உயர்நீதிமன்றம் | 6 | 4 | 2 | 8 |
| 2. | உள்ளூர் நீதிமன்றம் | – | 3 | 0 | 3 |

**9. rhiyfs¦ guhkç¥ò :**

| | (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| m¿¡if M©oy¦ rhiyfs¦ guhkç¥Ãw¦fhd bryÎ | 11.90 |
| brd¦w M©oy¦ bra¦a¥g£l bryÎ | 81.09 |

**10. நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகள் விபரம்:**

| வ.எ | விபரம் | 2016–17ல் உள்ள சாலைகள் கி.மீ | 2017–18ல் உள்ள சாலைகள் கி.மீ | 2018–19ல் உள்ள சாலைகள் கி.மீ |
|---|---|---|---|---|
| 01 | தார்சாலை | 8.901 | 9.491 | 9.261 |
| 02 | கருங்கல் சாலை | 0.590 | – | – |
| 03 | செம்மண் சாலை | – | – | – |
| 04 | மண் சாலை | 0.728 | – | – |
| 05 | சிமிண்ட் சாலை | 9.408 | 9.408 | 9.408 |
| 06 | பேவர் பிளாக் | 2.660 | 3.388 | 4.618 |
| | **கூடுதல்** | **22.287** | **22.287** | **22.287** |

நெடுஞ்சாலைத் துறையினரால் 6.00 கி.மீ. சாலை பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**IV. அடிப்படை கட்டமைப்பு இடைநிலை நிரப்பு நிதி 2007–08:**

இத்திட்டத்தில் நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி ரூ.70.00இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 23.09.2014ம் தேதிமுதல் புதிய அலுவலக கட்டிடத்தில் அலுவலகம் செயல்பட்டுவருகிறது.

**V, இடைவெளி நிரப்பு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி 2016–17**

இத்திட்டத்தில் இந்நகராட்சியில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

**VI. தெருவிளக்கு பராமரிப்பு**

நகராட்சி பராமரிப்பிலுள்ள தெருவிளக்குகள் விபரம்

| | எண்ணிக்கை |
|---|---|
| குழல் விளக்குகள் | 55 |
| எல்.இ.டி விளக்குகள் | 1266 |
| உயர்மின் கோபுர விளக்குகள் | 5 |
| கூடுதல் | 1326 |

நடப்பு ஆண்டில் புதிதாக மின் விளக்குகள் ஏதும் அமைக்கப்படவில்லை. எரியாத விளக்குகள் குறித்து புகார் பெறப்பட்டதும் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு எரியவிடப்படுகிறது.

தெரு விளக்குகள் பராமரிப்பு முழுவதும் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய மின் சேமிப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் **01.01.2018** முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்குகளுக்காக அறிக்கையாண்டில் செலவு மின் கட்டணம் ரூ.**13.84**இலட்சம் மற்றும் பராமரிப்பு செலவு ரூ.**6.96** இலட்சம் மொத்த செலவினம் ரூ.**20.80** இலட்மாகும்.

**11. வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம்:**

**2011** ம்ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **24404** ஆகும். திருத்துறைப்பூண்டி நகராட்சியை உள்ளடக்கிய வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதிக்கு ரூ.**9.97** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திருத்துறைப்பூண்டி நகரிலிருந்து **100** கி.மீ. தொலைவில் திருவைகாவூர் கிராமத்தில்

கொள்ளிடம் ஆற்றங்கரையில் தலைமை நீரேற்றும் நிலையம் உள்ளது. புதிய பேருந்து நிலையத்திலுள்ள **3,00,000** லிட்டர் கொள்ளளவுகொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் வருகிறது. **30** குதிரை திறன் மின் மோட்டார் பொறுத்தப்பட்டு **300** எம்.எம். குழாய்கள் மூலமாக புதிய பேருந்து நிலையத்திலுள்ள **15,00,000** லிட்டர் கொள்ளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் நீரேற்றம் செய்யப்படுகிறது. பகிர்மான குழாய் **37** கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**2524** எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் இணைப்புகள் மூலமாகவும், **216** பொது குடிநீர் குழாய்கள் மூலமாகவும் தினசரி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு **73** லிட்டர் வீதம் குடிநீர் தினசரி காலையில் சுமார் **2** மணி நேரம் **17,80,000** லிட்டர் வழங்கப்படுகிறது. மேலும் **74** எண்ணிக்கையிலான கைப்பம்புகள் நல்ல நிலையில் பராமரிக்கப்படுகிறது. தினசரி நபர் ஒருவருக்கு **73** லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் சொத்து வரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ரூ.**102.00** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் வட்டி இல்லாத கடனாக பெற்று தற்போது குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

**12. பொது சுகாதாரம்:**

| வ.எ. | பொது சுகாதார பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | துப்புரவு ஆய்வாளர் | 01 |
| 02 | களப்பணி உதவியாளர் (கொசு ஒழிப்புத் திட்டம்) | 01<br>(காலியிடம்) |
| 03 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 03 |

| | | |
|---|---|---|
| 04 | துப்புரவு பணியாளர்கள் | 28 |
| 05 | ஓட்டுநர்கள் | 03 |

## 13. பொது நலப் பணிகள்:

நகராட்சியினால் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிக்குன் குன்யா, டெங்கு காய்ச்சல் பன்றி காய்ச்சல் போன்ற நோய்கள் குறித்து விழிப்புணர்வுகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டு, நகராட்சியின் பொதுசுகாதார பணியாளர்களால் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்காவண்ணம் பராமரிக்கப்பட்டு நோய்கள் வராமல் தடுக்கப்பட்டு வருகிறது.

## 14. பிறப்பு விகிதமும் - மகபபேறு உதவியும் :

மகப்பேறு மையங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஏதும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. அரசு மருத்துவமனை மேற்படி மகப்பேறு உதவிகளை செய்து வருகின்றது. நகர்நல மையம் ஒன்று நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவாரூர் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நிர்வாகத்தால் தொடங்கி நடத்தப்பட்டு வரப்படுகிறது.

## 15. பிறப்பு விகிதமும் - தொற்றுநோய்களும் :

அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் பதிவான மொத்த பிறப்புகள் 1677 பிறப்பு விகிதம், ஜனத்தொகைக்கு 6.8% கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு பதிவான பிறப்புகள் 2328 அறிக்கையாண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 156 இறப்பு விகிதம் ஜனத்தொகைக்கு 0.6% ஆகும். சென்ற ஆண்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 210 ஆகும்.

| | |
|---|---|
| காலரா | அறிக்கையாண்டில் இந்த நோய் ஏதும் இல்லை. |
| சீதம் மற்றும் பேதி | அறிக்கையாண்டில் இந்த நோய் ஏதும் இல்லை. |
| காசநோய் | அறிக்கையாண்டில் இந்த நோய் ஏதும் இல்லை. |
| தொழு நோய் | அறிக்கையாண்டில் தொழுநோய் ஏதும் பரவவில்லை. அரசு மருத்துவமனையில் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. |
| பிளேக் | அறிக்கையாண்டில் இந்த நோய் ஏதும் இல்லை. |
| மலேரியா | இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் மலேரியா ஒழிப்புத்திட்டம் இல்லை. |
| டெங்கு காய்ச்சல் | அறிக்கை ஆண்டில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| பன்றி காய்ச்சல் | எதுவும் இல்லை |

**(அ) பொதுசுகாதாரம்:**

**துப்புரவு & கழிவறைகள்**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டுள்ள இடங்களில் பொது கழிவறைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | பொது கட்டண கழிவறைகள் |
| 2 | காய்கறி அங்காடி | |
| 3 | மன்னார்குடி சாலை | ஒருங்கிணைந்த சுகாதார வளாகம். |
| 4 | வேதை சாலை | |
| 5 | சந்தைப்பேட்டை | |
| 6 | திருவாரூர் சாலை அரசலடி தெரு | சமுதாய கழிவறை |
| 7 | மன்னார்குடி சாலை | நம்ம டாய்லட் |
| 8 | அரியலுர் | நம்ம டாய்லட் |
| 9 | வேதாரண்யம் சாலை பைபாஸ் அருகில் | பொதுக் கழிப்பறை |
| 10 | சுாமியப்ப நகர் | பொதுக் கழிப்பறை |
| 11 | புதிய பேருந்து நிலையம் | இலவச பொது கழிப்பறை |
| 12 | நாடார் தெரு | சமுதாய கழிப்பறை |

**(ஆ) அச்ச அருவருக்கத்தக்க தொழில்கள் :**

இவ்வினத்தின் கீழ் வணிகம் செய்ய உரிமையாணை கோரிய எல்லா இடங்களும் துப்புரவு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது. **1920-ம்** ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் **1939** விதிகளின்படி விதிகளை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அச்ச அருவருக்கத்தக்க தொழில் உரிமையாணை தொகை அறிக்கை ஆண்டில் ரூ.**256420/-** ம் சென்ற ஆண்டில் ரு:.**225630/-** வசூலிக்கப்பட்டது.

**(இ) திருவிழா:**

அருள்மிகு பிறவி மருந்தீஷ்வரர் ஆலய திருவிழா மற்றும் அ/மி. முள்ளாட்சி மாரியம்மன் கோயில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நகராட்சி சார்பில் பொதுசுகாதார ஏற்பாடுகள் குடிநீர் வசதிகள் முதலியன மிகச் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. திருவிழாவிற்காக சிறப்பு செலவினங்கள் ஏதும் செய்யப்படவில்லை.

**(ஈ) வாராந்திர சந்தை:**

அருள்மிகு பிறவி மருந்தீவரர் ஆலய நிர்வாகத்தினால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வாராந்திர சந்தை நடத்தப்பெற்று வந்தது. மேற்படி சந்தை நடத்தும் இடத்தில் அரசினர் மருத்துவமனை கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மருத்துவமனையும் கடடப்பட்டு விட்டது. எனவே, நகராட்சி சார்பில் மேற்படி சந்தையை நடத்த உரிய இடம் தேர்வு செய்யப்பட்ட நிலையில் போதிய இடம் வசதி இல்லாததால் இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் தினசரி காய்கறி அங்காடியாக செயல்பட்டு வருகிறது.

**(உ) தூய்மை இந்தியா திட்டம்:**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில் தனி நபர் கழிப்பறைகள் கட்டும் திட்டத்தில் 1776 கழிப்பறைகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை பணி**

இந்நகர் பகுதியில் தினசரி உற்பத்தியாகும் திடக்கழிவு 8 மெகா டன் இதில் 4.5 மெகா டன் ஈரக்கழிவுகள் 3.5 மெகா டன் உலர் கழிவுகள் என தரம் பிரிக்கப்பட்டு ஈரக்கழிவுகளை வேதைசாலை நகராட்சி உரக்கிடங்கு பதியில் காட்டப்பட்டுள்ள நுண் உரக்கலவை மையத்தில் கையாளப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது.

3.5 மெகா டன் உலர் கழிவுகள் விற்பனைக்கு உகந்த 1.5 மெகா டன் கழிவுகள் மறு சுழற்சிக்கு விற்கப்பட்டு தொகை துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. 2.0 மெகா டன் விற்பனைசெய்ய இயலாத மறு சுழற்சிக்கு தகுதியற்ற உலர் கழிவுகள் அரியலூர் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதன்படி அனுப்பப்பட்டு எரியூட்டப்படுகிறது.

**தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (ICE) விழிப்புணர்வு பணி:**

நகரில் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள குடியிருப்பு தோறும் தினசரி சென்று குப்பைகளை தரம்பிரித்து வழங்குதல் குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

**வீடு தோறும் உரம் தயாரிக்கும் முறை: (HOME COMPOSTING)**

நகரில் 425 வீடுகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வீடுதோறும் தங்கள் வீட்டில் உற்பத்தியாகும் ஈரக்கழிவுகளை உரம் தயாரிக்கும் முறைகள் தெரிவிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் இப்பணி நகரின் இடவசதி உள்ள அனைத்து வீடுகளிலும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 3 **R** கோட்பாட்டின்படி குறைத்தல் (**REDUCE**) மறுபயன்பாடு **(REUSE**) மறுசுழற்சி செய்தல் **(RECYCLE)** திடக்கழிவு மேலாண்மை பணி செயல்படுத்தப்படுகிறது.

**(ஊ) சுடுகாடு:**

இந்நகர் மன்றத்தால் மன்னார்குடி ரோட்டில் இரண்டும், வடபாதி ஆற்றங்கரையில் ஒன்றும், வேதாரண்யம் ரோட்டில் ஒன்றும், சிங்களாந்தியில் இரண்டும், செட்டித் தெருவில் ஒன்றும், பெரியநாயகிபுரத்தில் ஒன்றும், நாடார்

தெருவில் ஒன்றும் மற்றும் ரொக்க குத்தகையில் ஒன்றும் ஆக 13 சுடுகாடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**16. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் :**

**குடிநிர் விநியோகம் :**

| வ.எ. | விபரம் | விநியோக அளவு |
|---|---|---|
| 01 | மக்கள் தொகை<br>2011-ம் வருட கணக்கின்படி | 24404 |
| 02 | மக்கள்தொகை கணக்கின்படி தேவைப்படும் தண்ணீர் அளவு (எல்.ப்பி.சி.டி) | 22.00 லட்சம் லி.<br>90 (LPCD) |
| 03 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் –கூட்டுக்குடிநீர் திட்ட குடிநீர் மேல்நிலை தொட்டி மூலமாக வழங்கப்படும் தண்ணீர் அளவு<br>உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள். | 16.00 லட்சம் லி.<br>1.00 லட்சம் லி. |
| 04 | மினி பவர் பம்ப் மூலமாக வழங்கப்படும் தண்ணீர் அளவு மற்றும் கைப்பம்பு மூலமாக வழங்கப்படும் தண்ணீர் அளவு | 0.80 லட்சம் லி. |
| 05 | தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு | 17.80 லட்சம் லி.<br>(73 LPCD) |
| 06 | நகரின் மேம்பாட்டுக்கான இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கு குடிநீர் டேங்கர் மூலம் நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநிர் அளவு | 60,000 லி. |

**17. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம்**

வேதாரண்யம் கூட்டு குடிநீர்த் திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் (ம) வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**18. பாதாள சாக்கடைத்திட்டம்**

திருத்துறைப்பூண்டி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 24404 ஆகும். இந்நகராட்சி மாவட்ட தலைநகரான திருவாரூரிலிருந்து 28 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்நகர மக்களின் முக்கிய தொழில் விவசாயம் ஆகும். இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகையில் 25% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். இந்நகருக்கு தற்போது கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் நகரிலுள்ள இதர நீர் ஆதாரங்கள் மூலமாக சுமார் 90 L.P.C.D. நீர் வழங்கும் வகையில் நீர் ஆதாரம் ஏற்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகரில் குடிநீர் பயன்பாட்டில் 80% கழிவு நீராக வெளியேறுகையில் முறையான வடிகால் அமைப்பு இல்லாததால் நகரில் குளம் மற்றும் ஆறு போன்ற நீர் நிலைகளில் இக்கழிவு நீர் கலந்து மாசுபடுகிறது. இதனால், சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்படைகிறது.

ஆனால் நகரில் தற்போது பாதாள சாக்கடை அமைப்பதற்கு போதுமான இடவசதி இல்லை. எனவே அத்திட்டத்திற்கு பதிலாக கசடு–கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் (FSTP 2018-19) ரூ.185.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்பட உள்ளது.

## 19. பூங்காக்கள் :

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்டுள்ளவாறு நான்கு இடங்களில் பூங்காவிற்கான இடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனை மேம்பாடு செய்திட ரூ.3.00இலட்சத்திற்கு நகர் ஊரமைப்பு பிரிவு இயக்குனர் திருச்சி அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை

1. காந்தி முதலியார் நகர்
2. ஸ்ரீ சாய் என்லேவ் மனைப் பிரிவு
3. ஸ்ரீ சாய் நகர் மனைப் பிரிவு
4. ஜே.கே.ஆர்.கார்டன்
5. சாய்ராம் நகர்
6. ஜே.எஸ்.கே நகர்.
7. ஏ.எஸ்.வி.ஆர்.நகர்.
8. வெங்கடேஸ்வரா நகர்.
9. கிருஷ்ணா நகர்.

**<u>20. நகரமைப்பு பிரிவு</u>**

திரு.க. அருள்முருகன் நகரமைப்பு ஆய்வர் 05.01.2015 முதல் அறிக்கை ஆண்டில் பணிந்து வருகிறார்.

**<u>அ) கட்டிட அனுமதி 1.4.2018 முதல் 31.3.2019 முடிய</u>**

| | | |
|---|---|---|
| **I.** | அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவுகள் எண்ணிக்கை | 2 |
| **II.** | **கட்டிட அனுமதி** | |
| **அ)** | அறிக்கை ஆண்டு துவக்கத்தில் நிலுவையிலிருந்த மனுக்கள் | –– |
| ஆ) | அறிக்கை ஆண்டில் வரப்பெற்ற மொத்த மனுக்கள் | 34 |
| | கூடுதல் | 34 |
| | அனுமதி வழங்கப்பட்டவை | 34 |
| | நிராகரிக்கப்பட்டவை | 0 |
| | 31.3.2017ல் நிலுவை | 0 |

**<u>ஆ) வரை கடப்புகள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டு துவக்கத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் எண்ணிக்கை | இல்லை |
| 2. | அறிக்கையாண்டில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவை | இல்லை |
| 3. | அறிக்கையாண்டில் முடிவில் இருந்தவை | இல்லை |
| 4. | அறிக்கையாண்டில் ஆக்கிரமிப்பு கட்டணம் வசூல் | இல்லை |

தற்காலிக ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நகராட்சியினால் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் அகற்றப்பட்டு வருகிறது.

**<u>இ) நகரளவு:</u>**

இந்நகராட்சிக்கு நகரளவர் பணியிடம் புதிதாக அனுமதிக்கப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட நல அளவை உதவி இயக்குனர், அவர்களன் செயல்முறை ஆணை ந.க.எண்.12022/987/அ2 நாள் 3110.1998 முதல் ஒரு நகர சார் ஆய்வாளர் மற்றும் புல உதவியாளர் பணிபுரிந்து வந்ததை உதவி இயக்குநர் மாவட்ட நில அளவை துறை திருவாரூர் அவர்கள் ந.க.எண்.550/2010/அ1 நாள் 1.3.2013ன் மூலம் இந்நகராட்சி வசம் இருந்த நகரளவை பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் பணியாளர்களை தனி வட்டாட்சியர், நகர நிலவரித் திட்டம், திருத்துறைப்பூண்டிக்கு ஒப்படைக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இந்நகராட்சி ந.க.எண்.918/2013 நாள் 14.03.2013ன்படி ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் இந்நகராட்சியில் நகரளவைப் பணியாளர்கள் மற்றும் பதிவேடுகள், ஆவணங்கள் ஏதும் இல்லை.

**ஈ) உள்ளூர் திட்ட குழுமம் – முழுமைத் திட்டம் :**

திருத்துறைப்பூண்டி நகரின் உள்ளூர் திட்ட குழுமம் பகுதிக்கான முழுமைத் திட்டம் அரசாணை எண் 520 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 7.12.1999–ல் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 24–ன்கீழ் அரசின் இணக்கம் அளிக்கப்பட்டு முழுமைத் திட்ட விதிகளின்கீழ் அரசிதழில் அறிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**21) வருவாய் துறை :**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றியுள்ளார்கள்

| | | |
|---|---|---|
| 1. | வருவாய் ஆய்வர் (உதவியாளர் நிலை) | 1 |
| 2. | வருவாய் உதவியாளர் | 5 |

அறிக்கையாண்டில் வருவாய பிரிவு பணியாளர்களுக்காக செலவுத் தொகை ரூ. 2938986 /– சென்ற ஆண்டு செலவு ரூ.1584532/– ஆகும்.

**அ) மார்க்கெட் (தினசரி)**

இந்நகராட்சியில் தினசரி காய்கறி மார்க்கெட் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. காய்கறி அங்காடி 2018-19 ஆம் ஆண்டிற்கு 3 கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் 2018–19 ஆம் ஆண்டிற்கு பொதுஏலம் விடாமல் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டதில் தொகை ரூ.4,17,400/– வருமானம் ஈட்டியுள்ளது.

சரக்கு லாரி வண்டி வாகனங்கள் மற்றும் தெருவோர வசூல் ஆகியவை தனியே பிரித்து ஏலம் விடப்பட்டதில் சரக்கு லாரி வண்டி வாகனங்கள் ஆகியவற்றிற்கு தொகை ரூ.4,06,000/-க்கு வருவாய் வந்துள்ளது. சென்ற ஆண்டு வருமானம் ரூ.3,93,600/-

இந்நகராட்சியில் மீன்மார்க்கெட் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. குத்தகை மூலம் 2018-19ம் ஆண்டிற்கு ஏலம் விட்டதில் ரூ.1,93,000/- வருவாய் வந்துள்ளது. சென்ற ஆண்டு வருமானம் ரூ.1,87,428/-

ஆ) இந்நகராட்சியில் ஆடு அடிக்குமிடம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. குத்தகை மூலம் 2018-19 ஆண்டிற்கு ஏலம் விடப்பட்டதில் ரூ.37,008/- வருவாய் வந்துள்ளது. சென்ற ஆண்டு வருமானம் ரூ. 35,280/-

இ) இந்நகராட்சியால் ஒரு பேரூந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு சுமார் 150 பேருந்துகள், பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றன. 2018-19ம் அறிக்கையாண்டில் பொது ஏலம் கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்த புள்ளி கோரிட எவரும் முன்வராததால் அலுவலகம் மூலம் வசூல் மேற்கொள்ளப்பட்டதில் தொகை ரூ.3,04,284/– வருமானம் வந்துள்ளது.

.    சென்ற ஆண்டு வருமானம் ரூ.3,68,004/-

| வ.எ. | சொத்துவரி | | காலிமனைவரி | |
|---|---|---|---|---|
| 1. | பொது காரியங்களுக்கு | 4.5% | அரையாண்டிற்கு | ¼% |
| 2. | குடிநீர் விநயோகம் மற்றும் சாக்கடை வரி | 3.0% | அரையாண்டிற்கு | ¼% |
| 3. | மின் விளக்குவரி | 3.0% | அரையாண்டிற்கு | 1.8% |
| 4. | பொதுகாரியங்களுக்கு | 2.0% | அரையாண்டிற்கு | 1.8% |
| | கூடுதல் | 12.5% | | 3.4% |

## ஆ) தொழில்வரி

புதிய தொழில்வரி சட்டத்தின்படி அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட விகிதப்படி தொழில்வரி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டது.

| வ.எ. | அரை வருட வருமானம் (6 மாத மொத்த ஊதியம்) | அரையாண்டு வரித் தொகை ரூ. | 01.10.2018ல் இரண்டாம் அரையாண்டு வரி ரூ. |
|---|---|---|---|
| 1 | ரூ.21000/- வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21001/- முதல் ரூ..30000/- வரை | 150/- | 150/- |
| 3 | ரூ..30001/- முதல் ரூ.45000/- வரை | 380/- | 380/- |
| 4 | ரூ..45001/- முதல் ரூ..60000/- வரை | 740/- | 740/- |
| 5 | ரூ..60001/- முதல் ரூ..75000/- வரை | 1120/- | 1120/- |
| 6 | ரூ..75001/- முதல் அதற்கு மேலும் | 1250/- | 1250/- |

தொழில்வரி மூலம் இவ்வாண்டு ரு:.27.73 இலட்சம் வசூல் ஆகியுள்ளது. சென்ற ஆண்டு வசூல் ரு:.22.78 இலட்சம் ஆகும்.

## 22) பன்றிகள் ஒழிப்பு

அறிக்கையாண்டில் கட்டுப்பாடின்றி அலைந்து திரிந்த பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தப்பட்டது. சாலைகளில் கட்டுப்பாடின்றி அலைந்து திரிந்த கால்நடைகள் பிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

## அ) நாய்கள் இனப்பெருக்கம் கட்டுப்படுத்துதல் (ABC)

நகர் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள தெரு நாய்களின் எண்ணிக்கை 246. அறுவை சிகிச்சை செய்திட செலவினம் அனுமதித்து (மன்றத் தீர்மானம் எண் 22 நாள் 26.2.2010) நகர்மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை செய்திட உரிய கட்டுமான வசதிகள் இல்லாமையால் மாவட்ட ஆட்சியர் அறிவுரைப்படி கால்நடை

துறையுடன் இணைந்து 186 நாய்களுக்கு அறுவை சிகிச்சையும், 346 நாய்களுக்கு ARV ஊசியும் போடப்பட்டுள்ளது. இந்நிதி யாண்டில் 246 நாய்களுக்கு கருத்தடை அறுவை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஆ) அறிக்கையாண்டில் சொத்துவரி மற்றும் தொழில்வரி வசூல் செய்யப்பட்டுள்ள விபரம் 2018-19**

| வ.எ. | விபரம் | தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 130.16 |
| 2 | தொழில்வரி | 27.73 |
| 3 | சென்ற ஆண்டில் சொத்துவரி | 95.77 |
| 4 | சென்ற ஆண்டில் தொழீல்வரி | 22.78 |

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை கணக் கின்படி ஒரு நபர் | சொத்து வரி | 533 |
| 2. | வரி விகிதம் விவரிக்கப் பட்டுள்ளது | தொழில் வரி | 113 |

**இ) சொத்துவரி கேட்பு,வசூல் நிலுவை விபரம் வருமாறு**

அறிக்கையாண்டில் நடப்பு கேட்பில் நீதிமன்ற வழக்குகள் சம்மந்தப்பட்டதும் நீங்கலாக மற்றும் அரசு கட்டிடம் மற்றும் காலங்கடந்தவைகள் நீங்கலாக அரசு கட்டிடங்கள் உட்பட 97 சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வசூல் 100 சதவீதம் ஆகும்.

**23) நிதி நிலைமை (2018-2019)**

| விபரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|
| ஆரம்ப இருப்பு | -5.96 |
| எல்லா இனங்களிலும் சேர்த்து வரவு | 912.61 |
| எல்லா இனங்களிலும் சேர்த்து செலவு | 1048.42 |
| இறுதி இருப்பு | -141.77 |

**<u>அ) கடன்கள் மற்றும் மான்யம்</u>**

ஆண்டு இறுதியில் நிலுவையாய் உள்ள கடன் ரூ.**106.61/-** இலட்சம். அறிக்கை ஆண்டில் கடன்கள் ஏதும் பெறப்படவில்லை. அரசுக் கடன்கள் தவணைத்தொகை வட்டித்தொகை கீழ்க்கண்ட விபரப்படி செலுத்தப்பட்டுள்ளது.

**<u>கட ன்:</u>**

| வ.எ. | திட்டத்தின் பெயர் | **2018-19**ம் ஆண்டு கடன் தொகை செலுத்திய விபரம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | HUDCO (W.S.) | **9.61** |

**<u>ஆ) மான்யம்:</u>**

| வ.எ. | திட்டத்தின் பெயர் | **2018-19**ம் ஆண்டு மான்யத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | **13**வது நிதிக்குழு | **15.48** |
| **2** | ESCROW | **30.55** |
| **3** | சட்டமன்ற உறுப்பினர் நிதி (ம) பாராளுமன்ற உறுப்பினர் நிதி | **57.00** |
| **4** | எஸ்.பி.எம் | **50.10** |
| **5** | GAJA CYCLONE | **20.00** |

**<u>இ) மாநில நிதிக்குழு மான்யம் (Devolution Fund)</u>**

இந்நகராட்சியில் **2018–19**ம் ஆண்டில் மாநில நிதிக்குழு மான்யமாக ரூ.**348.59** இலட்சம் வரப்பெற்றுள்ளது.

**<u>24) தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஈமச்சடங்கு மான்யம் :</u>**

Ï¤jiy¥Ãd¦ÑH¦ **2018–19** M« M©ow¦F muR khd¦a« ஏதும் வரப்பெறவில்லை.

**25. தணிக்கை & (உள்ளாட்சி நிதி தணிக்கை)**

<u>இந்நகராட்சியில் 2017–18ம் ஆண்டு வரை தணிக்கை முடிவடைந்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2018–19ம் ஆண்டு தணிக்கை துவங்கப்பட்டுள்ளது.</u>

| | எண்ணிக்கை |
|---|---|
| அறிக்கையாண்டில் தொடக்கத்தில் இருந்த தணிக்கைத் தடைகள் | 686 |
| அறிக்கை ஆண்டில் வரப்பெற்றவை | – |
| மொத்தம் | 686 |
| முடிக்கப்பட்டவை | 101 |
| அறிக்கை ஆண்டில் இறுதியில் நிலுவை | 585 |

**மாநில கணக்காயர் தணிக்கைத் தடைகள் (A.G. Audit Para):**

| | எண்ணிக்கை |
|---|---|
| 2013–14 | 2 |
| 2015–16 | 1 |
| 2017–18 | 12 |
| கூடுதல் | 15 |

நிலுவைப் பத்திகளுக்கு உரிய பதில்கள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**bghW¥òfs¦-ÏU¥òfs¦:**

efuh£Áæd¦ ÏU¥ò«, bfhL¡f¥gl nt©oa bghW¥ò bjhiffS« Ãd¦tUkhW:

**நகராட்சி இருப்புத் தொகை :**

2018-19ம் அறிக்கை ஆண்டில் கொடுக்கப்பட வேண்டிய நிலுவையிலுள்ள கடன் தொகை

| | (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| புதிய பேருந்து நிலையம் கட்டியது IUDP | 5.40 |
| வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம் | 101.20 |

## **26. தகவல் மையம் :**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.ந.க.எண்.88411/97 எம்.ஜி.எ.2 நாள்.22.03.1998-ன்படி நகராட்சியின் முன் பகுதியில் தனியாக தகவல் மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் மக்கள் சாசனம் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறது.

### **அ) கணிப்பொறி:**

அரசாணை (நிலை) எண்.201 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.10.1998-ல் கணிப்பொறி உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு, அறிக்கை ஆண்டில் தெ.சிற்றரசு கணிணி உதவி திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.

தற்போது, பிறப்பு/இறப்பு பதிவுகள் அனைத்தும் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு சான்றுகள் கணிப்பொறி மூலம் அன்றாடம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 01.08.2003 முதல் கணிணி மயமாக்கப்பட்ட சேவை மையம் தொடங்கப்பட்டு, பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. வரி மற்றும் வரியில்லா இனங்கள் சொத்துவரி முழுவதும் கணிணி மயமாக்கப்பட்டு பொதுமக்கள் தங்களது சொத்து வரியை இம்மையத்தில் செலுத்தி கணிணி மூலம் நேரிடையாக ரசீது வழங்கப்படுகிறது.

மேலுமஃ, தொழில்வரி, கட்டிட அனுமதி அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் நகராட்சி வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை, நகராட்சி கணக்குகள், நகராட்சி இருப்பு பதிவேடுகள் அனைத்தும் கணிணி மயமாக்கப்பட்டு (Online) நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நகராட்சி விபரங்கள் முழுவதும் Website மூலம் வெளியிடப்பட்டு நகராட்சி நடைமுறைகளை எல்லோரும் அறிந்து கொள்ள வெளிப்படையானதாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

28.12.2015 முதல் நகராட்சி புதிய கணக்கு முறை வரி மற்றும் வரியில்லா இனங்க்ள், வரிவசூல் ஆகியன மத்திய வழங்கி கனிணி வழியாக (Centralised Web Based Sever) http://tnurbaneseva.tn.gov.in இணைய வழி சேவை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

## 27. திருத்துறைப்பூண்டி நகராட்சியின் சுற்றுப்புற சூழ்நிலை குறிப்பு

திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லையில் 3 மர அறுவை மில்லும் 18 அரிசி மாவு மில்லும் உள்ளது. மேலும், 52 மளிகை கடைகளும், 24 ஜவுளிக்கடைகளும், 8 உணவு விடுதிகளும், 3 தங்கும் விடுதிகளும் உள்ளன. 3 திரைப்பட அரங்குகள் உள்ளது. 6 திருமண மண்டபங்கள் உள்ளன. திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லையில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. நகராட்சியின் பெரும் பகுதி குடிசைப் பகுதியாகும். நகராட்சியை சுற்றியுள்ள இடங்களும் கிராமங்களாகும். இந்த ஊரின் முக்கிய தொழில் விவசாயம் ஆகும்.

திருத்துறைப்பூண்டியில் பேருந்து நிலையம், புகைவண்டி நிலையமும் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து சென்னை, பாண்டிச்சேரி, மன்னார்குடி, பழனி, திருவாரூர், வேதாரண்யம், காரைக்குடி, திருச்சி,மதுரை, திருச்செந்தூர், தூத்துக்குடி. இராமேஷ்வரம். மயிலாடுதுறை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கும்பகோணம், பட்டுக்கோட்டை ஆகிய ஊர்களுக்கு தினமும் பேருந்துகள் சென்று வருகின்றன.

திருத்துறைப்பூண்டி வழியாக காரைக்குடி முதல் திருவாரூர் வரை பாசஞ்சர் புகை வண்டி சேவை அகலப்பாதை அமைக்கும் பணிக்காக நிறுத்தப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டு ரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டு உள்ளது.

இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 24404 ஆகும். திருத்துறைப்பூண்டி மற்றும் சிங்களாந்தி ஆகிய இரு வருவாய் கிராமங்களை கொண்ட 11.935 ச.கி.மீ. இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் பேருந்து நிலையம் ஒன்றும், தினசரி காய்கறி அங்காடி ஒன்றும், தினசரி மீன் அங்காடி, ஆட்டிறைச்சி அங்காடியும் உள்ளது. மேலும் நகரத்தை தூய்மைப்படுத்திட தூய்மை இந்தியா திட்டம் மற்றும் , அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 28. பொது குறிப்புகள்:

நகராட்சி நிர்வாகத்திற்கும் Miza® kw¦W« mid¤J mYty®fS¡F« Ïilna R_fkhd cwÎ ãiy m¿¡ifah©oy¦ நிலவி வந்துள்ளது.

**வரி வசூல் சதவீதம் 2018–19:**

அறிக்கையாண்டில் சொத்து வரி சீராய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து சொத்துவரியில் **97** சதவீதமும் குடிநீர் கட்டணம் **87** சதவீதமும் வரியில்லா இனங்கள் வரி வசூல் **88** சதவீதமும் வசூல் செய்து தஞ்சாவூர் மண்டலத்தில் உள்ள நகராட்சிகளில் முதலிடமும், தமிழக அளவில் **3**ம் இடமும் பெற்றுள்ளது.

தமிழ் M£Á bkhê¤ Â£I« m¿¡ifah©oy¦ Áw¥ghf bray¦gL¤j¥g£Ls¦sJ. ã®thf m¿¡ifæd¦ Ïiz¥òfS« KGikahf jäênyna jahç¡f¥g£Ls¦sJ. bghJthf Ïªef®kd¦w mYty®fs¦ kw¦W« gâahs®fs¦ ã®thf¤ij ey¦yKiwæy¦ el¤Âl KGikahd x¤JiH¥ig bfhL¤Js¦sh®fs¦ nkY« efuh£Á ã®thf Miza® br‹id, efuh£Á ã®thf k©ly Ïa¡Fe®, kht£l M£Á¤jiyt® ÂUth%® mt®fŸ KGx¤JiH¥ò bfhL¤J ã®thf« br›tnd el¤Âl m¿¡Îiu tH§»aj‰F திருத்துறைப்பூண்டி நகராட்சி பணியாளர்கள் சார்பாக மிகவும் நன்றியினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

***** நன்றி வணக்கம் *****

**த.பாஸ்கரன்.,**
நகராட்சி பொறியாளர்/
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
திருத்துறைப்பூண்டி நகராட்சி

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள் :

{}{}{}{}{}{}